

நாகை மாவட்டம் கோடியக்கரைக்கு தென்கிழக்கே இந்திய கடல் பகுதியில் 4 பைபர் படகில் சென்று மீன் பிடித்துக் கொண்டிருந்த நாகை, மாவட்டத்தைச் சேர்ந்த நாகை அக்கரைப்பேட்டை, வெள்ளப்பள்ளம், செருதூர், ஆறுகாட்டுத்துறை ஆகிய மீனவ கிராமங்களைச் சேர்ந்த மீனவர்கள் மீது இலங்கைக் கடற்கொள்ளையர்களால் தாக்கப்பட்டு நாகை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவக் கல்லூரில் சிகிச்சை பெற்று வரும் மீனவர்களை கழக துணைப் பொதுச் செயலாளர் ஆ.ராசா நேரில் சந்தித்து விபரங்களை கேட்டறிந்து ஆறுதல் கூறினார். உடன் நாகை மாவட்டக் கழகச் செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தலைவருமான என்.கௌதமன், நாகை நகரக் கழகச் செயலாளர் இரா.மாரிமுத்து மற்றும் மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயலாளர்கள் உள்ளிட்டோர் உள்ளனர்.

### பொதிகைத் தமிழ்ச்சங்கம் சார்பில் கவிஞர் பேரா தலைமையில் கவிதைப் போட்டி!

# பாளையங்கோட்டையில் முதல்வருக்கு பாராட்டு விழா!

## புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் பெயரில் விருதுகள் வழங்கினர்!

பாளையங்கோட்டை,மே.7 -

பொதிகைத் தமிழ்ச் சங்கம் சார்பாக கலைஞர் பெயரில் பல்கலைக்கழகம் அமைக்கப்படும் என அறிவித்த முதலமைச்சருக்கு நன்றி பாராட்டு விழா மற்றும் தமிழ் வார விழா நடந்தது.

பாளையங்கோட்டை அரசு அருங்காட்சியகத்தில் நடந்த இந்த நிகழ்ச்சிக்கு பொதிகைத் தமிழ்ச் சங்க நிறுவுநர் கவிஞர் பேரா தலைமை தாங்கினார்.

நிகழ்ச்சியில் தமிழ் வார விழாவாக "வீழ்ச்சியுறு தமிழகத்தில் எழுச்சி வேண்டும்" என்ற தலைப்பில் கவிதைப் போட்டி நிகழ்ச்சியில் காரைக்குடி, மதுரை, திண்டுக்கல், நாகர்கோவில், தூத்துக் குடி, திருநெல்வேலி, பாளையங்கோட்டை உட்பட பல ஊர்களிலிருந்து நூறு நபர்கள் கலந்துகொண்டு கவிதை வாசித்தனர்.

சிறப்பாக கவிதை வாசித்த காரைக்குடியைச் சேர்ந்த சை.சபீதா பானு, மதுரை பாலகிருஷ்ணன், மேலப்பாளையம் எமி கிங்ஸ்லி மனோ ஆகியோருக்கு புரட்சிக்கவி பாரதிதாசன் பெயரில் விருதுகள் வழங்கப்பட்டன.

விருதுகளை பொதிகைத் தமிழ்ச் சங்க நிறுவுநர் கவிஞர் பேரா வழங்கி உரையாற்றினார்.

அவர் பேசுகையில்...

"கலைஞர் பெயரில் புதிய பல்கலைக் கழகம் ஒன்று தொடங்க வேண்டும் என்ற பொதககைத் தமிழ்ச் சங்கத்தின் கோரிக்கை நிறைவேற்றப் பட்டிருப்பதற்கு முதலமைச்சருக்கு நன்றியும் பாராட்டும் உரித்தாக்கிக் கொள்கிறேன். அனைவரும் ஒரு நிமிடம் எழுந்து நின்று கைகளைத் தட்டி முதல்வரைப் பாராட்டுவோம்"

...எனத் தெரிவித்தார்.

அதனைத் தொடர்ந்து கூட்டத்திலிருந்த அனைவரும் எழுந்து நின்று தங்கள் கைகளைத் தட்டினர்.

கவிதைப் போட்டியின் நடுவர்களாக திண்டுக்கல் அ.ஷாஜஹான், நெல்லை டவுண் சிவ.செல்வ மாரி முத்து, நாகர்கோவில் வனசெல்வி அரவிந்தன் ஆகியோர் செயல்பட்டனர்.

நிகழ்ச்சியில் கண்ணதாசன் இலக்கியப் பேரவைத் தலைவர் முனைவர் இரா. முருகன், திருக்குறள் தகவல் மையத் தலைவர் முனைவர் வை.இராமசாமி ஆகியோர் பாராட்டுரை வழங்கினர்.

கவிதைப் போட்டியில் கலந்துகொண்ட அனைவருக்கும் பாராட்டுச் சான்றுகள் வழங்கப்பட்டன.

செயற்குழு உறுப்பினர் அடையாள.லெனின் நிகழ்ச்சியைத் தொகுத்து வழங்கினார்.

நிறைவாக பொதிகைத் தமிழ்ச் சங்க செயற்குழு உறுப்பினர் பா.இராமகிரு ஷ்ணன் நன்றி கூறினார்.

# ஈரோடு தெற்கு மாவட்டக் கழக செயற்குழு கூட்டம்!

## மாவட்டக் கழக செயலாளர் – அமைச்சர் சு.முத்துசாமி அறிக்கை!



ஈரோடு, மே 7 -

ஈரோடு தெற்கு மாவட்டச் செயலாளர் - அமைச்சர் சு.முத்துசாமி விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

ஈரோடு தெற்கு மாவட்ட கழக செயற்குழு கூட்டம் நாளை ( 8.5.2025 -வியாழக்கிழமை ) காலை 10 மணிக்கு மணல்மேட்டில் உள்ள மாவட்ட கழக அலுவலகம், கலைஞர் அறிவாலயம், தளபதி மன்றத்தில் மாவட்ட கழக அவைத் தலைவர் கே.குமார் முருகேஷ் தலைமையில் நடைபெற உள்ளது.

எனவே இந்நிகழ்ச்சியில் மாநில, மாவட்ட, மாநகர கழக நிர்வாகிகள், ஒன்றிய, பகுதி, பேரூர், வார்டு கழக செயலாளர் துணை அமைப்புகளின் மாவட்ட, மாநகர அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

பொருள் : அனைத்து ஒன்றிய, பகுதி கழகங்களில் தெருமுனை கூட்டங்கள் நடத்துதல்.

ஜூன் 1ம் தேதி மதுரையில் கழக பொதுக்குழு கூட்டம் நடைபெறுவது சம்பந்தமாக

கழக ஆக்கப் பணிகள்

இவ்வாறு ஈரோடு தெற்கு மாவட்ட கழக செயலாளரும், அமைச்சருமான சு.முத்துசாமி தனது அறிக்கையில் கூறியுள்ளார்.

# பெரம்பலூர் மாவட்டச் செயற்குழு கூட்டம்!

## மாவட்டக் கழக பொறுப்பாளர் வீ.ஜெகதீசன் அறிக்கை!



பெரம்பலூர், மே 7 -

பெரம்பலூர் மாவட்ட செயற்குழு கூட்டம் இன்று (07.05.2025 . புதன்கிழமை) நடைபெறுகிறது.

இது குறித்து பெரம்பலூர் மாவட்டப் பொறுப்பாளர் வீ.ஜெகதீசன் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு,

முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையில், சென்னை அண்ணா அறிவாலயத்தில் நடைபெற்ற மாவட்டச் செயலாளர்கள் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின்படி,

கழக துணைப் பொதுச் செயலாளர் ஆ.இராசா. எம்.பி., அறிவுறுத்தலின் படி, போக்குவரத்துத்துறை மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் ஆலோசனைக்கிணங்க,

பெரம்பலூர் மாவட்ட கழக செயற்குழு கூட்டம், மாவட்ட அவைத்தலைவர் அ.நடராஜன் தலைமையில், கே.என்.அருண்நேரு.எம்.பி., சட்டமன்ற உறுப்பினர் எம்.பிரபாகரன், ஆகியோரது முன்னிலை யில் , இன்று (07.05.2025-புதன்கிழமை) மாலை 3.00 மணிக்கு, பாலக்கரையில் உள்ள மாவட்ட கழக அலுவலகத்தில் நடைபெறுகிறது.

இந்த கூட்டத்தில், பெரம்பலூர் சட்டமன்ற தொகுதி தேர்தல் பார்வையாளர் தங்க.சித்தார்த், குன்னம் சட்டமன்ற தொகுதி தேர்தல் பார்வையாளர் ஏ.கே.அருண் ஆகியோர் கலந்து கொள்கின்றனர்.

இதில் மாநில நிர்வாகிகள், தலைமை செயற்குழு உறுப்பினர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், மாவட்ட கழக நிர்வாகிகள், ஒன்றிய,நகர, பேரூர் கழகச் செயலாளர்கள், மாவட்ட அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், முன்னாள் இன்னாள் உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன்.

பொருள்: முதல மைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையில் 03.05.2025, அன்று சென்னை அண்ணா அறிவாலயத்தில் நடைபெற்ற மாவட்டச் செயலாளர்கள் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் குறித்து,

ஜீன் 01, மதுரையில் நடைபெற உள்ள பொதுக் குழு கூட்டம் குறித்து,

ஜீன் 03, முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் பிறந்தநாள் நிகழ்ச்சி,

நாடு போற்றும் நாண்காண்டு, தொடரட்டும் இது பல்லாண்டு சாதனை விளக்க பொதுக்கூட்டங்கள் குறித்து, மற்றும்

கழக ஆக்கப்பணிகள்.

இவ்வாறு பெரம்பலூர் மாவட்ட கழக பொறுப்பாளர் வீ.ஜெகதீசன் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.




நாமக்கல் கிழக்கு மாவட்டத்தில் உள்ள நாமக்கல் கிழக்கு, மேற்கு, தெற்கு நகரங்கள், நாமக்கல், மோகனூர், சேந்தமங்கலம் ஆகிய ஒன்றியங்கள், சேந்தமங்கலம், மோகனூர் பேரூர் கழக நிர்வாகிகள் மற்றும் கிளை செயலாளர்கள், பி எல் ஏ 2 ஆகியோரின் வாரிசுகளின் கல்வி மற்றும் உயர் கல்விக்கு முத்தமிழறிஞர் கலைஞர் கல்வி உதவித்தொகையை நாமக்கல் கிழக்கு மாவட்ட திமுக செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும், நாமக்கல் மாவட்டம் மத்திய கூட்டுறவு வங்கி தலைவருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் 51 மாணவர்களுக்கு கல்வி உதவித்தொகை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் மாவட்ட அவைத்தலைவர் சி.மணிமாறன், சட்டமன்ற உறுப்பினர்கள் பெ.ராமலிங்கம், கே.பொன்னுசாமி மற்றும் ஒன்றிய, நகர, பேரூர் செயலாளர்கள், கழக நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்,



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (5.5.2025) மாற்றுத் திறனாளிகள் முன்னேற்றச் சங்கத்தின் மாநிலத் தலைவர் ரெ.தங்கம் மற்றும் நிருவாகிகள் சந்தித்து, தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் மாற்றுத்திறனாளிகள் நேரடியாக தேர்தலில் போட்டியிடாமல் நியமன முறையில் உறுப்பினராக வகைசெய்யும் அரசினர் திருத்தச் சட்ட முன்வடிவுகளை சட்டமன்றப் பேரவையில் நிறைவேற்றியதற்காக நன்றி தெரிவித்துக் கொண்டனர்.

### சென்னை கிழக்கு மாவட்டத்தில் பகுதி வாரியாக

# 'திராவிட மாடல்' அரசின் சாதனை விளக்கக் கூட்டங்கள்!

## மாவட்டச் செயலாளர் – அமைச்சர் பி.கே.சேகர்பாபு அறிவிப்பு!



சென்னை, மே 7 -

சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், கழகத் தலைவர், முதலமைச்சர் தலைமையில் நடைபெறும் திராவிட மாடல் அரசின் சாதனைகள் விளக்க பொதுக்கூட்டம் பகுதி வாரியாக நடைபெறும் விவரம் குறித்து மாவட்ட செயலாளர் - அமைச்சர் பி.கே.சேகர்பாபு அறிவிப்பு வருமாறு:-

**நாள்: 08.05.2025 (வியாழன்)**

கொளத்தூர் மேற்கு பகுதி - தலைமை: எ.நாகராாசன் எம்.சி, பகுதி செயலாளர்

இடம்: பெரவள்ளூர் சதுக்கம், அகரம்.

உரையாற்றுவோர்: முரசொலி. மூர்த்தி, தலைமை கழக பேச்சாளர்

அம்பத்தூர் தெற்கு - தலைமை: டி.எஸ்.பி.இராஜகோபால் எம்.சி,

இடம்: யாதவாள் தெரு, பாடி.

உரையாற்றுவோர்: திரு. ஆவடி.பாஸ்கர், தலைமை கழக பேச்சாளர்

வில்லிவாக்கம் கிழக்கு - தலைமை: வே.வாசு பகுதி செயலாளர்

இடம்: ஜாயிண்ட் ஆபிஸ் அருகில், அயனாவரம்.

உரையாற்றுவோர்: கொரஞ்சூர் எஸ்.முனுசாமி தலைமை கழக பேச்சாளர்

**நாள்: 09.05.2025 (வெள்ளி)**

அம்பத்தூர் கிழக்கு - தலைமை: எம்.டி.ஆர்.நாகராஜ் பகுதி செயலாளர்

இடம்: கொரட்டூர் பேருந்து நிலையம் அருகில்.

உரையாற்றுவோர்: திரு. ஆர்.ஜெயசீலன் தலைமை கழக பேச்சாளர்

வில்லிவாக்கம் மேற்கு - தலைமை: கூ.பி. ஜெயின் பகுதி செயலாளர்

இடம்: சிட்கோ நகர், வில்லிவாக்கம்.

உரையாற்றுவோர்: த.ஆதித்யன் தலைமை கழக பேச்சாளர்

**நாள்: 10.05.2025 (சனிக்கிழமை)**

எழும்பூர் வடக்கு - தலைமை: சொ.வேலு பகுதி செயலாளர்

இடம்: வெள்ளாள தெரு, புரசைவாக்கம்.

ஆவடி பாஸ்கர் தலைமை கழக பேச்சாளர்

ந.நரேன் கௌதம் தலைமை கழக இளம் பேச்சாளர்

திரு.வி.க.நகர் தெற்கு- தலைமை: எம்.சாமிகண்ணு பகுதி செயலாளர்

இடம்: வெங்கட்டம்மாள் சமாதி சாலை, ஐந்து விளக்கு, ஓட்டேரி.

உரையாற்றுவோர்: முரசொலி மூர்த்தி தலைமை கழக பேச்சாளர்

திருமதி.அ.தஸ்னீம் பானு தலைமை கழக இளம் பேச்சாளர்

துறைமுகம் கிழக்கு - தலைமை: எஸ். இராஜசேகர் பகுதி கழக செயலாளர்

இடம்: தம்புசெட்டி தெரு, காளிகாம்பாள் கோயில் அருகில், மண்ணடி.

உரையாற்றுவோர்: த.ஆதித்யன் தலைமை கழக பேச்சாளர்

**நாள்: 11.05.2025 (ஞாயிறு)**

எழும்பூர் தெற்கு- தலைமை: வி. சுதாகர் பகுதி கழக செயலாளர்

இடம்: வைத்தியநாதன் சாலை, ஹரிங்டன் ரோடு

உரையாற்றுவோர்: ஆர். ஜெயசீலன் தலைமை கழக பேச்சாளர்

**நாள்: 12.05.2025 (திங்கள்)**

அம்பத்தூர் வடக்கு - தலைமை: ஜோசப் சாமுவேல் எம்.எல்.ஏ பகுதி செயலாளர்

இடம்: ஓடி பேருந்து நிலையம் அருகில்

உரையாற்றுவோர்: தமிழ் சாதிக் தலைமை கழக பேச்சாளர்

கொளத்தூர் கிழக்கு - தலைமை: ஐ.சி.எப்.வ.முரளிதரன் பகுதி செயலாளர்

இடம்: ராகவன் தெரு, பெரம்பூர், செம்பியம்

உரையாற்றுவோர்: ஆவடி. பாஸ்கர் தலைமை கழக பேச்சாளர்

திரு.வி.க.நகர் வடக்கு- தலைமை: செ. தமிழ்வேந்தன் பகுதி செயலாளர்

இடம்: திரு.வி.க.நகர் 2வது தெரு, கலைஞர் நற்பணி மன்றம் அருகில்.

உரையாற்றுவோர்: ஆர். ஜெயசீலன் தலைமை கழக பேச்சாளர்

துறைமுகம் மேற்கு - தலைமை: எஸ்.முரளி பகுதி செயலாளர்

இடம்: தாதா முத்தையப்பன் தெரு, கோவிந்தப்பன் நாயக்கன் தெரு சந்திப்பு

உரையாற்றுவோர்: முரசொலி மூர்த்தி , தலைமை கழக பேச்சாளர்

மேற்கண்ட கூட்டங்களில் அந்தந்த பகுதிகளுக்கு உட்பட்ட மாநில நிர்வாகிகள், முன்னாள், இந்நாள் சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமை செயற்குழு உறுப்பினர்கள், மாவட்ட நிர்வாகிகள், பகுதி கழக செயலாளர்கள், தொகுதி பார்வையாளர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், மாவட்ட / பகுதி / வட்ட கழக செயலாளர்கள் / நிர்வாகிகள், அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், கழக முன்னோடிகள், கழக செயல்வீரர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டு கொள்கிறேன்.

இவ்வாறு மாவட்டக் கழகச் செயலாளர் அமைச்சர் பி.கே.சேகர்பாபு அறிவித்துள்ளார்.




அரியலூர் மாவட்ட தி.மு.க. செயல்வீரர்கள் கூட்டம் திருச்சி பைபாஸ் சாலையில் உள்ள வாணி மஹால் திருமண மண்டபத்தில் கழகச் சட்டத்திட்ட திருத்தக் குழு இணை செயலாளர் சுபா. சந்திரசேகர் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் தமிழ்நாடு அரசு போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார். உடன் ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் க.சொ.க.கண்ணன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் எம்.பி.பாலசுப்ரமணியன், மாவட்ட துணை செயலாளர்கள் மு.கணேசன், சி.சந்திரசேகரன், லதாபாலு மற்றும் மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள், கழக தோழர்கள் பலரும் கலந்துகொண்டனர்.




தஞ்சை மத்திய மாவட்ட, மாநகர தி.மு.க சார்பில் தளபதி வென்ற மாநில சுயாட்சி என்ற தலைப்பில் நடைபெற்ற கருத்தரங்கத்தில் உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன் சிறப்புரையாற்றினார், கழக வழக்கறிஞரும், நாடாளுமன்ற மேலவை உறுப்பினருமான பி.வில்சன் விளக்க உரையாற்றினார். இதில் மாவட்டச் செயலாளர் துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ, ச.முரசொலி எம்.பி, டி.கே.ஜி.நீலமேகம் எம்.எல்.ஏ, சட்டத்திருத்தக்குழு உறுப்பினர் சி.இறைவன், மாநகரச் செயலாளர் சண்.இராமநாதன், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் து.செல்வம், கே.டி.மகேஷ்கிருஷ்ணசாமி, மாநில மருத்துவர் அணி துணைச் செயலாளர் மரு.அஞ்சுகம் பூபதி உள்ளிட்ட கழக நிர்வாகிகள் உள்ளனர்.